Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 09-11 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 09-11 |
| --- | --- |

வேணு : 17 நவம்பர் 2011 கானம் : 4



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Rajthilak Printers, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

Related Websites : www.namadwaar.org
Email:contact@namadwaar.org

ஸ்ரீ ஹரி:

மதுராரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

ரூ.12/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை





வேணு : 17 | நவம்பர் 2011 | கானம் : 4

Delivered by India Post www.indiapost.gov.in



அக்டோபர் 27 -- மதுரபுரி ஆஸ்ரமம்
ஸ்ரீஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திர வைபவம்





அக்டோபர் 27 -
மேற்குமாம்பலம் அயோத்யா மண்டபம்
மற்றும் மதுரபுரி ஆஸ்ரமம்
ஸ்ரீஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின்
திருநக்ஷத்திர வைபவம்



அக்டோபர் 27 -
சென்னை மேற்குமாம்பலம் - அயோத்யா மண்டபம்
கோபகுடீரம் - "பக்தமீரா" நாடகம்
ஸ்ரீஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திர வைபவம்



செப்டம்பர் 24 – மலேசியா யுனிவர்சிட்டியில்
Timeless wisdom of our scriptures சத்சங்கம் - பாக்யநாதன்ஜீ



அக்டோபர் [illegible]
[illegible]





அக்டோபர் 6 –
சென்னை ப்ரேமிக பவனத்தில்
ஸ்ரீனிவாசப்பெருமாள் அவதார உத்ஸவம்



அக்டோபர் 15 –
மதுரபுரி ஆஸ்ரம வளாகம்
கல்யாண ஸ்ரீனிவாசப்பெருமாள்
புரட்டாசி சனிக்கிழமை
அன்னகூடோத்ஸவம்



செப்28-அக்5
மதுரபுரி – நவராத்திரி மஹோத்ஸவம்

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 17 நவம்பர் 2011 கானம் : 4

| | |
|---|---|
| மதுரமான மஹனீயர் - 188 | 03 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 07 |
| பாகவத பழம் -20 | 09 |
| எது மகிழ்ச்சி? | 23 |
| ப்ருந்தாவன கண்ணன் | 29 |
| சித்த சுத்தி | 14 |
| பாரம்பரிய பொக்கிஷங்கள் | 16 |
| சனாதன புதிர் | 21 |
| மாலே மணிவண்ணா | 31 |
| அப்பாலுக்கு அப்பால் | 34 |

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**நைதத் பரஸ்மா ஆக்யேயம் ப்ருஷ்டயாபி கதஞ்சன |**
**ஸர்வம் ஸம்பத்யதே தேவி தேவகுஹ்யம் ஸுஸம்வ்ருதம் ||**

பயோவ்ரதத்தை சிரத்தையாக முடித்த அதிதி தேவியிடம், தனது அவதாரத்தை பற்றி பேசிய பகவான், "பிறரால் கேட்கப்பட்டாலும், இந்த விஷயம் எவ்விதத்திலும் பிறருக்கு சொல்லப்பட வேண்டாம். ஓ! தேவியே! தேவரஹஸ்யமெல்லாம் நன்கு மறைக்கப்பட்டிருந்தால்தான் பயன் தருகிறது" என்று கூறினார்.

– ஸ்ரீமத்பாகவதம் 8 – 17 – 20 – வாமன அவதார கட்டம்

# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து ஆண்டாளுக்கு சாற்றிய மாலையையும் கிளிகளையும் ஒரு பக்தர் பிரசாதமாக ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்தார். ஸ்ரீஸ்வாமிஜி அதை ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு சாற்றினார். அப்பொழுது அந்த கிளி சற்று சாய்ந்து ப்ரேமிகவரதனின் அருகில் இருந்தது. அதை பார்த்து கொண்டே ஸ்ரீஸ்வாமிஜி பாடிய கீர்த்தனம்.

ராகம்: ஸரஸ்வதி தாளம் : ஆதி

பல்லவி

கிளி கொண்டு வந்த செய்திதான் என்னவோ?
ப்ரேமிகவரத! ப்ரேமிகவரத!

சரணங்கள்

அன்று நீ கோதைக்கு அருளியதை போல்
இன்று உனை எனக்கு அருளச் சொன்னாளோ?

(கிளி..)

ஆசார்ய ஸ்தானத்தில் தானே இருந்து
என் பொருட்டு சரணாகதி செய்வித்தாளோ?

(கிளி..)

ஊரும் சுற்றமும் அறிய வந்து அன்று
கை பிடித்த ரங்க மன்னார் நீதான் என்றாளோ?

(கிளி..)

# மதுரமான மஹனீயர் – 188

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

தூத்துக்குடி நாமத்வார் திறப்புவிழாவின்பொழுது ஸ்ரீஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், தமது அருளுரையில், “ ‘கனவு பலித்தது குருநாதா! மனமும் குளிர்ந்தது குருநாதா!’ என்று ஒரு கீர்த்தனம் உண்டு. எனக்கும் ஒரு கனவு உண்டு. உலகில் ஒவ்வொரு நாட்டிலும் நாமத்வார் அமைய வேண்டும். அந்த நாமத்வாரில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதன் எழுந்தருளி எல்லோருக்கும் அருள்பாலிக்க வேண்டும் என்பதுதான் அந்த கனவு” என்று தனது ஆசையை வெளிப்படுத்தினார்கள். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் அப்படி ஒரு ஸங்கல்பம் எழுமானால், அது வெகு விரைவிலேயே நிறைவேறி விடும் என்பது, நாம் அனைவரும் எத்தனையோ முறை நேரில் கண்டு அனுபவித்த ஒன்று. அவ்வண்ணமே, முதன்முறையாக ஒரு அயல்நாட்டில், மலேசியாவில் நாமத்வார் அமைந்து, அங்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் நமது ஆஸ்ரமத்திலிருந்து அனுப்பி அருளிய, மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனின் பிரதிஷ்டா வைபவம் 17-9-2011 அன்று வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. குருசேவையையே உயிர் நாடியாக கொண்டு செயல்பட்டு வரும் நமது மலேசிய நாமத்வார் அன்பர்களின் சீரிய முயற்சியினால்தான் இது சாத்தியமானது.

மலேசியா சென்று, நாமத்வார் மையத்தில் ஸ்ரீப்ரேமிகவரதன் சன்னதியை துவக்கி வைக்கும்படி ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் என்னை பணித்தார்கள். சிங்கப்பூர், இந்தோனேஷியா, ஆஸ்திரேலியாவில் இருந்து எல்லாம் ஸ்ரீஸ்வாமிஜியின் அன்பர்கள் வந்து கலந்து கொள்ள, இது ஒரு மாபெரும் உத்ஸவமாகவே உருவெடுத்து விட்டது. ஸ்ரீமாதுரீஸகீயும் ஸ்ரீப்ரேமிகவரதனும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அனுப்பி வைத்து, மலேசியாவும் அடைந்து விட்டார்கள். நாமத்வார் மையத்தில் அவர்கள் எழுந்தருளுவதற்கு வேண்டிய எழில்மிகு மண்டபமும் தயார் நிலையில் இருந்தது. நமது ஆஸ்ரமத்து உத்ஸவம் போல் எல்லாம்

தோற்றமளித்தது.

நான் மலேசியாவிற்கு கிளம்புவதற்கு சில நாட்களுக்கு முன்பாக, சென்னை ப்ரேமிக பவனத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீப்ரேமிக வரதனை பக்தி பிரதிஷ்டையாக செய்வதற்கான அனைத்து விதிமுறைகளையும் சொல்லி "நீ இப்படி செய்து விடு" என்றார்கள். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் சொன்னதுதான் தாமதம்; எனக்குள் சொல்ல முடியாத பய உணர்வு பற்றிக்கொண்டு விட்டது. அப்பொழுது தொடங்கி பிரதிஷ்டாதினம் வரை, "பரம கருணைக்கடலான குருநாதர், நம் மேல் உள்ள அளவிட முடியாத கருணையின் காரணமாக, நம்மை ஸகஜமாக நெருங்க அனுமதித்து விடுகிறார். ஆனால், ஸ்ரீப்ரேமிக வரதனிடம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கொண்டுள்ள பாவனையை நாம் என்னவென்று சொல்வது! நம் ஸ்வாமிஜி அவர்கள் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனுடன் இருப்பதை நேரில் பார்த்த ஒவ்வொருவருக்கும் அது ஓரளவு புரியும். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீப்ரேமிக வரதன் என்று பெயர் சூட்டி விட்டதால், இவரும் அதே ஸ்வாமிதானே! ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஆராதித்து மகிழக்கூடிய ஸ்ரீப்ரேமிகவரதனை நாம் எப்படி நெருங்குவது" என்று பற்பல எண்ண ஓட்டங்கள் அலைஅலையாக தாக்கின. பிரதிஷ்டாதினமும் வந்து விட்டது.

மலேசிய நாமத்வாரில் ஸ்ரீப்ரேமிகவரதன் மற்றும் ஸத்குருநாதரின் பாதுகைகளின் சன்னதியில் நின்று கொண்டு, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை மட்டும் மனதில் நினைத்து கொண்டு, சிறிது சிறிதாக தைரியத்தை வரவழைத்து கொண்டு ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கொடுத்த INSTRUCTIONSபடி(உபதேசங்களின்படி) ஒவ்வொன்றாக மாதுரீஸகீக்கும் ப்ரேமிகவரதனுக்கும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பாதுகைகளுக்கும் பூஜை செய்து கொண்டே வந்தேன். மனதிற்குள்ளோ "ப்ரேமிகவரதன் என்றால் நம் குருநாதர்தானே அனைத்து ஆராதனங்களும் மிக அழகுற செய்வார். இன்று இங்கு அவர் 'நேரில்' இல்லையே" என்ற எண்ணமும் எனக்குள் வந்து

கொண்டே இருந்தது. “குருநாதர் ஆக்ஞை இட்டு விட்டார். அவர்தானே எல்லாவற்றையும் செய்கிறார். அப்படியிருக்கையில் நாம் ஏன் இப்படி நினைக்க வேண்டும். எல்லாம் அவர் செயல்” என்று சமாதானப்படுத்தி கொண்டேன்.

ஸ்வாமிக்கு நிவேதனம் சமர்ப்பிக்கக் கூடிய கட்டமும் வந்தது. அப்பொழுது மனதிற்குள் இருந்த எண்ண ஓட்டமும் தாங்க முடியாத அளவிற்கு வலுத்து விட்டது. “ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு ஆஸ்ரமத்தில் நம் குருநாதர் தன் திருக்கரங்களால் அல்லவா நிவேதனங்களையும் பக்ஷணங்களையும் ஆசை ஆசையாக கொடுப்பார். நேரில் அந்த செல்ல கண்ணனுக்கு யசோதாம்மா ஊட்டி விடுவது போல் அல்லவா இருக்கும் அந்த காட்சி. இங்கு நாம் இதை செய்யும் நிலை வந்து விட்டதே! குருநாதா! நீங்கள்தான் ஏதாவது செய்து காப்பாற்ற வேண்டும்” என்று மனதிற்குள் வேண்டி கொண்டேன்.

பிரார்த்தனை செய்து சில நிமிடங்கள்தான் சென்றிருக்கும். சென்னையிலிருந்து ஒரு சத்சங்க சகோதரி (முத்து பவுன்) யாரும் எதிர்பாராதவண்ணம் மலேசிய நாமத்வாருக்கு வந்தார். வந்தவர் தன் கையில் ஒரு சிறிய கவரை கொண்டு வந்து கொடுத்து, என்னை அதை உடனே பெற்று கொள்ளும்படி வற்புறுத்தினார். அவரிடம் சென்று விசாரித்தபொழுதுதான் அந்த இன்ப அதிர்ச்சி வெளிப்பட்டது.

அந்த சகோதரி, தான் முந்தைய தினம் சென்னையில் குருநாதரை தரிசித்ததாகவும், குருநாதர் ஒரு பேரிச்சம்பழ பாக்கெட்டை எடுத்து கொடுத்து, மலேசிய நாமத்வாரில் உள்ள ப்ரேமிகவரதனுக்கு ஸமர்ப்பிக்குமாறு என்னிடம் கொடுக்க சொன்னதாகவும் தெரிவித்தார். நானும் அங்ஙனமே செய்தேன். ஆக, ப்ரேமிகவரதனும் குருநாதர் திருக்கரங்களாலேயே அன்று அமுது செய்து விட்டான். பிரார்த்தனை சத்குருநாதரின் காதுகளை எட்டி விட்டதை நினைத்தும், குருநாதரின் பரம கருணையை எண்ணியும் நெகிழ்ந்து போனேன். விபரத்தை கூறியவுடன், கூடியிருந்த அனைத்து அன்பர்களும் வியந்து போனார்கள்.

அன்று மாலை இந்தியாவிலிருந்து டெலிகான்பரன்ஸ் மூலமாக ஸ்ரீஸ்வாமிஜி மலேசிய அன்பர்களுக்கு அருளுரை வழங்கினார்கள். அப்பொழுது தவம் என்றால், "பகவான் எப்பொழுது வருவான் என்று ஏங்கி கொண்டே இருப்பதுதான். அப்படி நீங்கள் ஒவ்வொருவரும் பகவான் வர வேண்டும் என்று செய்த தவத்தினாலேயே பகவான் கோலாலம்பூருக்கு எழுந்தருளி விட்டான். அங்கு முழுமையாக இருக்கின்றான். அவனை நீங்கள் கொஞ்சி வழிபட்டீர்களானால், அவன் எண்ணற்ற லீலைகளை புரிவான். பகவானை கொஞ்சுவது என்றால் அவனுக்கு மிகவும் பிடித்தமான மஹாமந்திரத்தை கீர்த்தனம் செய்து கொண்டே இருப்பதுதான்" என்று அருளினார்கள். ஸத்குருநாதர் அருளியது போல் மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனின் முதல் லீலை மலேசியாவில் அன்றே நடந்து விட்டது.


GOD
Global Organisation for Divinity

உலக அமைதி வேண்டியும், எல்லாருக்கும்
எல்லாவிதமான நன்மைகள் ஏற்படவும், "ஹரே ராம"
மஹாமந்திரத்தின் வைபவத்தை நிலைநிறுத்தவும்

மஹாரண்யம் ***ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி***
**அவர்களின் முன்னிலையில்**
***மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை*** **நடைபெற உள்ளது.**

*நாள்: ஜனவரி 1, 2012 ஞாயிற்றுக்கிழமை*

*நேரம்: 6.30* **PM** – *8.30* **PM**

*இடம்:* **Sastry Maidan, Sub-urban School Grounds, Coimbatore**

அனைவரும் வருக! திருவருள் பெறுக!

For Details contact: Global Organisation for Divinity India Trust,
10/26, Ramakrishnapuram 2nd street,
West mambalam, Chennai - 33. Ph -23718351. www.godindia.org



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி : மஹாமந்திர கீர்த்தனத்தினால் நாம் நினைக்கும் பிரார்த்தனைகள் கைகூடுமா?

பதில் : நிச்சயமாக கைகூடும்.

கேள்வி : இதற்கு ஏதாவது தடைகள் உண்டா?

பதில் : இந்த மஹாமந்திர கீர்த்தனம் எப்படி உன்னுடைய குறைகளை போக்கும் என்று கேட்பவர்களிடம் தொடர்பே வைத்து கொள்ள கூடாது; அதை காதாலும் கேட்க கூடாது; ஏன் என்றால் அப்படி ஒருமுறை காதில் விழுந்தாலும் கூட, அது நம்முடைய மனதில் புகுந்து, நம்முடைய நம்பிக்கையை ஆட்டம் காண செய்யும். அவநம்பிக்கையுடன் செய்யும் பிரார்த்தனை அவ்வளவு சீக்கிரத்தில் பலன் அளிக்காது. நம்பிக்கையுடன் செய்யும் பிரார்த்தனை சீக்கிரத்தில் பலன் அளிக்கும்.

கேள்வி : மஹாமந்திரம் சொல்லி, எப்படி பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று சொல்லி கொடுங்களேன்.

பதில் : ஒருவருக்கு மனது பலவீனமாக (WEAK) உள்ளது. எதிர்மறையான (NEGATIVE THOUGHTS) எண்ணங்கள் வந்து கொண்டிருக்கின்றது. எல்லாவற்றிலும் தயக்கம், பயம், சந்தேகம் இருக்கின்றது என்று வைத்து கொள்வோம். இவைகளில் இருந்து அவர் வெளி வரவேண்டும் என்று நினைத்தால், அவரோ, அவருக்காக வேறு ஒருவரோ முதலில் மஹாமந்திர கீர்த்தனம் செய்ய வேண்டும். யாருக்காக பிரார்த்தனை செய்கின்றோமோ, அவரையும் அவருடைய பெயரையும் மனதால் நன்றாக நினைத்து கொண்டு, பகவான் கிருஷ்ணனை, அவருடைய மனதை பலப்படுத்த (STRENGTHEN) வேண்டும் என்று நன்றாக பிரார்த்தித்து, தினமும் இவ்வளவு மஹாமந்திரம் அல்லது இவ்வளவு மணிநேரம் என்று கணக்கு வைத்து சொல்லி வர, பிரார்த்தனைகள் கைகூடும்.

கேள்வி : எல்லா பிரார்த்தனைகளும் இப்படித்தானா?

பதில் : ஆம்! எல்லாவிதமான பிரார்த்தனைகளும் இப்படித்தான். கிருஷ்ணனுடைய பெயரால் பிரார்த்தனை செய்யுங்கள். உங்களுடைய பிரார்த்தனை நிறைவேறும். அப்படி பிரார்த்தனை செய்யும்பொழுது அந்த பிரார்த்தனை நிறைவேற வேண்டும் என்பதை த்ருடமாக நினைத்து, ஒருமுகப்பட்ட மனதுடன் மஹாமந்திர கீர்த்தனம் செய்யுங்கள். நாமம் அதிசயங்களை கொண்டு வரும்.

**அறிவிப்பு**

**ஸ்ரீ ப்ரேமிக வேதாஸ்ரமம்**, (ஸ்ரீசாந்தீபனி குருகுலம் ஸ்ரீரங்கம் டிரஸ்ட்), **24.11.2011 தேதியிலிருந்து** 127, வடக்கு உத்திர வீதி, ஸ்ரீரங்கம் - 620006 என்ற முகவரியில் செயல்படும் என்பதை தெரிவித்து கொள்கிறோம்.

The D Studio
www.dexterousinfo.com
Quality is never an accident
It is always the result of intelligent effort
www.vapssky.com
dex gamez
www.dexgamez.com
Mobile Data Security Systems
Mobile Enhancement Utilities
Multimedia Content Exchange
3d Multiplayer Games
Roblock
Theft Recovery System for Blackberry - Windows mobile - Sony Ericsson mobile phones
Roblock provides protection and safety from theft or losing your mobile phones and helps to retrieve it back. Now the users can forget the fear of losing their mobile phones by protecting it using Roblock software.
SMS notification on SIM Change
Recover contacts from lost phone
Remote WIPE memory card
Complete Stealth operations
contact@dexmobile.com
Ph: +91 960019777



# பாகவத பழம் (20)

**பாகம் 2 – அத் 7**

– ஸ்ரீஸ்வாமிஜி

நாரதர் "எந்த இடத்தில் ஸாதுக்களால் லௌகீக கலப்பு இல்லாமல் கீர்த்தனம் நடக்கின்றதோ, அந்த இடத்தில் பகவான் தன் பூர்ண கலையுடன் அந்த நொடியே பிரஸன்னமாகி விடுகின்றான் என்பது பிரஸித்தம்தானே. இப்படி அவனைக் கீர்த்தனம் செய்துகொண்டு உலகத்தில் எல்லோருக்கும் சாந்தியைக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றேன்'' என்று தனது முற்பிறப்பை பற்றி விஸ்தாரமாக எடுத்துக்கூறி, சிரித்த முகத்துடன் கீர்த்தனம் செய்தபடியே புறப்பட்டு சென்றார்.

சௌனகாதி ரிஷிகள் ஸூதரைப் பார்த்து பின்வருமாறு கேட்கலானார்கள். "நாரதர் கிளம்பிச் சென்ற பிறகு, வியாஸர் என்ன செய்தார்?'' என்று ஸூதர் தொடர்ந்தார். ப்ரஹ்ம நதியான ஸரஸ்வதி நதிக்கரையின் மேற்குக் கரையில் யாகங்கள் செய்ய ராசியான ஒரு ஆஸ்ரமம் உள்ளது. அதற்கு 'சம்யாப்ராஸம்' என்று பெயர். அது முழுவதும் இலந்தை மரங்களால் சூழப்பட்டது. பக்தியுடன் கூடியவராக வியாஸர், அங்கு தியானத்தில் ஆழ்ந்தார். அப்பொழுது ஹ்ருதயத்தில் பரமாத்மாவையும், அவரை அண்டியிருக்கும் மாயையையும் பார்த்தார். ஜீவாத்மாவை அந்த மாயைத் தொடாவிட்டாலும் கூட, அதனால் தொடப்பட்டதாகவும் ஸத்வ, ரஜஸ், தமஸ் இதனால் தாக்கப்பட்டதாகவும் ஜீவன் ஆகின்றது. ஒரு மனிதனுக்கு ஏற்படும் கஷ்டத்தைப் போக்குவதற்கு, அநேக சாதனங்கள் இருக்கலாம். ஆனால், வாஸுதேவனிடத்தில் வைக்கும் பக்திதான் நேரிடையாகக் கஷ்டத்தைப் போக்குகின்றது என்பதை அறியாதவர்களுக்கு அறிய வைப்பதற்காக, ஸ்ரீமத்பாகவதத்தைச் செய்யலானார். அப்படி செய்த பாகவதத்தை மீண்டும் ஒரு தரம் சரி பார்த்து, தன் குழந்தையான சுகருக்கு பாடம் சொல்வது போல் சொல்லி வைத்தார்.

நான் எப்பொழுதும் "நான் நான்" என்று நினைத்து கொண்டிருப்பதை உணர்ந்தேன். அப்பொழுது "நான் நான்" என்று நினைத்து கொண்டிருக்கும் "நான்" ஒன்றை உணர்ந்தேன். அந்த "நான்", "நான், நான்" என்று நினைத்து கொண்டிருக்காமல், "நானாகவே இருக்கிறேன்" என்று முழுமையாக உணர்கின்றதோ அதுவே ஞானம்.

– மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

சௌனகாதி ரிஷிகள் இடைமறித்து ஸூதரைப் பார்த்து, சுக ப்ரும்மமோ ஜீவன்முக்தர். அவர் எதற்காக ஸ்ரீமத் பாகவதத்தைக் கற்றார்?'' என்று கேட்க, தொடர்ந்து ஸூதர் பேசலானார்.

ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களைக் கடந்தவரும், நிர்குணமானவருமான வாஸுதேவனிடத்தில், ஜீவன்முக்தர்களும் இயற்கையாகவே பக்தி செய்கின்றனர். அதன்படியே ஸ்ரீ சுகரும் வாஸுதேவனின் கீர்த்தியைச் சொல்லக்கூடிய இந்த ஸ்ரீமத் பாகவதத்தைக் கற்றார். இதில் வியப்பென்ன!

மஹாபாரதத்தில் துரோணரின் குமாரனான அஸ்வத்தாமா, மஹாபாரத யுத்தம் முடிந்த பிறகு, தன்னையும் தன் தந்தையையும் பல வசதிகளுடன் ஆதரித்து வந்த துரியோதனுக்கு, ஏற்பட்ட நிலையை அறிந்து வருத்தமுற்றான். சற்று நேரத்தில் துரியோதனனின் உயிர் பிரியப் போகின்றது. அப்பொழுதே அவனுடைய சரீரத்தில் இருக்கும் மாமிசத்தை சாப்பிட நரி, கழுகு, ஓநாய் போன்றவைகள் முயற்சிக்க, அவற்றை தனது கைகளாலேயே தடுக்கும் துரியோதனின் நிலை கண்டு பரிதவித்தான் அஸ்வத்தாமா. அவனுடைய மனது, ஆத்திரத்தால் அறிவிழந்தது. பாண்டவர்களை பழிவாங்க

நினைத்தான். எப்படி என்று செய்வதறியாது திகைத்தான். காமத்தால் பீடிக்கப்பட்டவன், பயந்தவன், கவலை அடைந்தவன், அவமானப்பட்டவன், ஆத்திரம் அடைந்தவன், பைத்தியம் பிடித்தவன், தீராத நோயினால் பீடிக்கப்பட்டவன் இவர்களுக்கு எளிதில் தூக்கம் வராது. அஸ்வத்தாமா காட்டை அடைந்து, ஒரு ஆலமரத்தின் அடியில் தங்கியிருந்தான். உறக்கம் வரவில்லை. எப்படி பாண்டவர்களை பழிவாங்குவது என்று சிந்தித்துக்கொண்டு, தீராத வெறியுடன் உலாவிக் கொண்டிருந்தான். அந்த ஆலமரத்தில், பல பறவைகள் கூடுகட்டி, முட்டையிட்டு, குஞ்சு பொறித்திருந்தன. அப்பொழுது, இரவில் சஞ்சரிக்கக்கூடிய ஆந்தைகள் வந்து, கூட்டை கலைத்து,, குஞ்சுகளையும் முட்டைகளையும் உடைத்து, அங்கிருந்த பல கூடுகளையும் சின்னாபின்னமாக்கின. பறவைகள் மரத்திலிருந்து வெளியே கிளம்பி சப்தமிட்டபடி, தங்களுடைய குஞ்சுகள், முட்டைகள், கூடுகள் இவைகளை காப்பாற்ற முடியாத துக்கத்தால் அலறின. பாண்டவர்களை பழிவாங்குவதற்கு வழி தெரியாமல், திகைத்துக் கொண்டிருந்த அஸ்வத்தாமாவிற்கு, ஆந்தை வழிகாட்டியதுபோல் இருந்தது. கூடாரத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் திரௌபதியின் குழந்தைகளை கொல்வதுதான் இதற்கு ஒரே வழி என்று தீர்மானித்து, அதன்படி செய்ய முடிவெடுத்தான். அதன்படியே, கூடாரத்தில் இருந்த திரௌபதியின் குழந்தைகளைக் கொன்று குவித்தான்.

காலையில் குழந்தைகள் கொல்லப்பட்டு இருப்பதை பார்த்த திரௌபதி, செய்வதறியாமல் திகைத்தாள். புத்திர சோகத்தால் தவிக்கும் திரௌபதியை சமாதானப்படுத்த அர்ஜுனன், அப்பொழுது ஒரு வீரசபதம் செய்தான். தங்களுடைய குழந்தைகளைக் கொன்றவனை கண்டு பிடித்து, திரௌபதி முன்பாக அழைத்துவந்து, அவனை கொல்வதாக சபதமெடுத்துக் கொண்டான். அர்ஜுனன் அஸ்வத்தாமாவைப் பிடித்து இழுத்து வந்து, திரௌபதியின் முன்பு

நிறுத்தினான். தன் குழந்தைகளைக் கொன்றது தங்களது குருவான துரோணரின் மகனான அஸ்வத்தாமா என்று தெரிந்து கொண்ட திரௌபதி, அந்த நிலையிலும் அவனை நமஸ்கரித்தாள். குருபுத்ரனான அவனைக் கொல்வது பாவம் என்றாள். குரு அவருடைய குமாரன் உருவில், இன்றும் இருந்து வருகின்றார் என்றாள். மேலும் இவனைக் கொலை செய்வதால், இறந்த என் குழந்தைகள் உயிருடன் வந்துவிடப் போகின்றார்களா? என்றாள். மேலும், துரோணருடைய மனைவி கௌதமி இன்னும் உயிரோடு இருக்கின்றாள். அவள் மிகவும் பதிவ்ரதை. இவனைக் கொன்றுவிட்டால், நான் எப்படி இப்பொழுது புத்திரசோகத்தால் தவிக்கின்றேனோ, அப்படித்தானே அவளும் தவிப்பாள்! ஆகவே அஸ்வத்தாமாவை விட்டுவிடுங்கள்" என்றாள். தர்மபுத்திரர் திரௌபதி சொன்னதைக் கேட்டு, மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். கிருஷ்ணனும் திரௌபதி சொன்னதை கேட்டு, மிகவும் மகிழ்ச்சி அடைந்தான்.

பீமன் திரௌபதி சொன்னதை ஆமோதிக்கவில்லை. ஆயுதம் எடுத்தவன், குருவோ, குருபுத்திரனோ, அந்தணனேயாயினும் அவன் கொல்ல தகுந்தவன் என்று கொக்கரித்தான். கிருஷ்ணன், பீமன் சொன்னதும் சரி என்றான். (கனியும்)


**<u>செய்தி</u>**

*ஆன்மீக பத்திரிக்கை* **திரிசக்தி தீபாவளி சிறப்பு மலரில்** *நமது மதுரபுரி ஆஸ்ரமத்தில் நடந்த* **ஸ்ரீப்ரேமிகவரதனின் ப்ரும்மோத்ஸவ, ராதாகல்யாண காட்சிகள்** *இடம்பெற்றுள்ளன. மேலும்* **ஸ்ரீஸ்வாமிஜி** *அவர்கள், எழுதி உள்ள* **மஹாத்மா ஆண்டவன் பிச்சை** *அவர்களின் தெய்வீக சரித்திரமும் இடம் பெற்றுள்ளது. அன்பர்கள் இதனை வாங்கி பயன் அடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

கீழே அடிபட்டு விழுந்திருக்கும் ஒருவனை பலசாலியான ஒருவர், கையை பிடித்து, மெதுவாக தூக்கி நிறுத்தி, அவனை நடக்க வைக்க வேண்டும். இல்லை என்றால், அவனால் எழுந்து நடக்கவே முடியாது. அதுபோல், மாயையால் அடிபட்டு, கீழே விழுந்திருக்கும் என்னை, ஒரு விசேஷ அனுக்ரஹம் உடனே செய்து, எழுப்பி விடு. இல்லை என்றால், உன் பக்தியில், என்னால் முன்னேறவே முடியாது.

– மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

ஒரு தந்தை பல குழந்தைகளை பெற்று, அதன் மேல் பாசம் வைத்து, விடவும் முடியாமல், பிடித்து கொள்ளவும் முடியாமல் எப்படி துன்புறுவானோ, அப்படி நான் துன்புறுகின்றேன். மனதோ சொன்னதை கேட்காத பிள்ளையாக உள்ளது; அறிவோ, தனக்கே எல்லாம் தெரிந்ததாக நினைத்து கொண்டிருக்கின்றது; பிராணனோ, எதற்கும் அடங்க மாட்டேன் என்கின்றது; சரீரமோ, எப்பொழுதும் வியாதியுடன் நோஞ்சானாக உள்ளது; அந்தகரணமோ, வெளியிலிருந்து எல்லா வியவஹாரங்களையும் சேர்த்து கொண்டுள்ளது. நான் என்ன செய்வேன்?

– மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

# சித்த சுத்தி

–பத்மபாதர்

பிரார்த்தனை என்பது எல்லோருக்கும் பொதுவானது. எளிமையானது. அவரவர் மனதில் தோன்றும் எண்ணங்களை அவர்களுக்கு தெரிந்த விதத்தில் தெரிந்த மொழிகளில் மனம் விட்டு இறைவனிடம் பகிர்ந்து கொள்வதைத்தான் பிரார்த்தனை என்கின்றோம். பஸ்மாஸுரன், ஹிரண்யகசிபு போன்று பிறர் அழிவை வேண்டி பிரார்த்திப்பவர்கள், தாமஸர்கள். ராவணன் போன்று தனக்காக பிரார்த்தனை செய்பவர்கள், ராஜஸர்கள். ஞானத்திற்காக மட்டும் பிரார்த்தனை செய்பவர்கள், ஸாத்வீகர்கள். தனக்காக பிரார்த்தனை செய்பவர்களில் இரண்டு விதம். ஒன்று தனக்கு இருக்க கூடிய துன்பங்கள், கவலைகள், வியாதிகள், தரித்திரம் போன்றவைகள் விலக வேண்டும் என்பது ஒரு விதம். மேலும் மேலும் செல்வம், வசதி, புகழ், பதவி வரவேண்டும் என்று பிரார்த்திப்பது இரண்டாவது விதம்.

அநேகமாக வேலை கிடைக்க வேண்டும், கல்யாணம் கைகூட வேண்டும், பதவி உயர்வு வேண்டும், குழந்தை பிறக்க வேண்டும் போன்ற பிரார்த்தனைகள் எல்லாம் சுலபத்தில் கைகூடி விடுகின்றது. ஆனால் நாம் பழக்கி கொண்ட தீய பழக்க வழக்கங்களை விட வேண்டும் என்று எவ்வளவு பிரார்த்தனை செய்தாலும், அது மட்டும் எளிதில் நடக்கவே மாட்டேன் என்கின்றது. காரணம் என்ன?

நாம் ஏற்கனவே தீய அல்லது கெடுதலான செயல்களை பலமுறை செய்து விட்டதால், அவைகளின் வாசனைகள் தீவிரமாக உள்ளத்தில் பதிந்து விட்டது. அதனுடைய தாக்கம் இன்றும் நம்மை தூண்டுவதால்தான், மீண்டும் மீண்டும், அத்தகைய தீய செயல்களை செய்ய கூடாது என்றாலும் கூட, நாம் நம்மை மீறி அவைகளை செய்து விடுகின்றோம். பிறகு அப்படி செய்ததற்கு வருத்தப்படுகின்றோம். இத்தகைய தீய பழக்கங்களிலிருந்து

வெளியே வர முடியாதோ என்று கவலைப்பட்டு, நம்பிக்கையை இழக்கின்றோம்.

பிரார்த்தனைகள் நமக்கு நிறைவேறுவது எப்படி? குழந்தையே பிறக்கவில்லை என்றால், அதற்கு ஒரு பலமான பாவம் காரணம் ஆகின்றது. பிரார்த்தனையால் பாவம் விலகுகின்றது. அதனால் குழந்தை பிறக்கின்றது. ஆனால் செய்கைகளுக்கு காரணம் த்ருடமாக படிந்த வாசனை. நல்ல செய்கைகளை திரும்ப செய்து வந்தால், நல்ல வாசனை த்ருடமாகும். கெட்ட வாசனைகளை திரும்ப திரும்ப செய்து வந்தால் கெட்ட வாசனைகள் த்ருடமாகும். மனதில் இருக்க கூடிய தீய எண்ணங்கள் போக வேண்டும் என்று நாம் வேண்டிக்கொள்ளும்பொழுது, “அது பாவம் போல், சட்டென விலகக்கூடிய விஷயமில்லை. அப்பொழுது கெட்ட வாசனைகளால் ஏற்படக்கூடிய கெட்ட செயல்களில் இருந்து, நான் விடுபடுவதற்கு வழியே இல்லை” என்று எண்ணி நாம் பிரார்த்தனையை கை விட்டு விட கூடாது. விடாமல் பிரார்த்தனை செய்து கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், நாமும் அத்தகைய கெட்ட செயல்களிலிருந்து விடுபடுவதற்கு இயன்ற அளவில் முயற்சித்து கொண்டே வர வேண்டும்.

அப்பொழுது என்ன ஆகும் என்றால், பகவான் அவனுடைய அருளால், நம்முடைய மனோபலத்தை அதாவது WILL POWERஐ கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்துவான். அப்படி MENTAL STRENGTH அதிகமாக ஆக ஆக, நாம் தவறான செய்கைகளை செய்வது கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து விடும். அப்படி குறைந்து, நல்ல வாசனைகளின் பலம் அதிகமாகும்பொழுது தீய வாசனைகளின் பலம் தானாகவே பலம் இழந்து விடும். இதன் மூலம் சித்தம் சுத்தியாகி விடும். சித்தம் சுத்தமானால், அதில் பகவத் தியானம் தடையின்றி நீண்ட நேரம் சித்திக்கும். அந்த தியானத்தின் மூலம் ஞானமும் கைகூடி சமாதி கைகூடும். பிறகு சமாதி சஹஜமாகி விடும்.

மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன்
குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி இந்தியா டிரஸ்ட் வழங்கும்

# "பாரம்பரிய பொக்கிஷங்கள்"

**நாரத கானசபா, ஆழ்வார்பேட்டை: ஜனவரி 13 – 22:** *மாலை 6.30-8.30*

**ஜனவரி 13 மாலை 6PM – 6.30PM**

முன்னிலை: நீதியரசர் **ஸ்ரீ டி.எஸ்.அருணாசலம்**, யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரம நிர்வாகி

குத்து விளக்கு ஏற்றி துவக்கம்: **ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி**, தலைவர் ஜி.ஏ.டிரஸ்ட் மற்றும் **ஸ்ரீகே.ஸ்ரீராம்** – Channel Head , Star Vijay TV

துவக்க உரை: "மஹாமஹோபாத்யாய" டாக்டர் **ஸ்ரீ R. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்**

*13/1/12* "தெய்வீக முத்திரைகள்" - **பரதநாட்டியம்** *"யுவகலாபாரதி"* **ஸ்ரீவிஜய்மாதவன்** – *ரசித நருத்யாலயாவின் ஸ்தாபகர்*

*14/1/12* **பண்டைய பாரதத்தின் மேன்மை – மூலிகைகளும் ஆயுர்வேதமும்** "**பத்மஸ்ரீ**" **தர்ஷன்சங்கர்,** *தலைவர், ஆயுர்வேத ஆய்வகம், பெங்களூர்*

*15/1/12* "**துரோணாச்சாரியார்**" – *நாடகம்* – **மனோகர் தியேட்டர்ஸ்** *"நாடக சார்வ பௌம" மனோகரின் குழு*

*16/1/12* **அத்வைதிகளும் கிருஷ்ணபக்தியும்** – *"பாதராயண சம்மான்"* **ப்ரும்மஸ்ரீ மணித்ராவிட் சாஸ்திரிகள்** *சமஸ்கிருத கல்லூரி பேராசிரியர்*

*17/1/12* "**ரஸமான கல்வெட்டுக்கள்**" – **குடவாயில் ஸ்ரீபாலசுப்ரமணியன்** *கோவில் வரலாறு, கல்வெட்டு நிபுணர்*

*18/1/12* **பண்டைய கால பாரத விஞ்ஞானம்** *"பாதராயண சம்மான்"* **ப்ரும்மஸ்ரீ ராமசுப்ரமணியன்,** *பேராசிரியர், மும்பை ஐ.ஐ.டி*

*19/1/12* "**முற்பிறவி குறித்து வளர்ந்து வரும் மேலைநாட்டினரின் பார்வை**" **ஸ்ரீமதி காயத்ரி சிவராமகிருஷ்ணன்** *மனோதத்துவ நிபுணர்*

*20/1/12* **ஜோதிடம்** – *ஜோதிடமேதை பி.வி.ராமனின் புதல்வி* **ஸ்ரீமதி காயத்ரி வாசுதேவ்**

*21/1/12* **த்வாரகையும் சரஸ்வதி நதியும் – டாக்டர். ஸ்ரீ டி.கே.ஹரி** *பாரதஞான் ஆய்வு இணையத்தின் ஆசிரியர்*

*22/1/12* **ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்கள்** – *ஸ்ரீப்ரதீப் ஜானகிராமன், சௌ.சங்கீதா ஜானகிராமன் & சத்சங்க அன்பர்கள்*

சனாதனப் புதிர் - பகுதி - 33 —ஆத்ரேயன் ( விடைகள் அடுத்த இதழில்)

1. சதுர்பத்ரம் என்று எதை குறிப்பிடுகிறார்கள்?
2. ராமனை காட்டிலும் சூரன் யார்?
3. மனிதர்களால் அடைய முடியாதது எது?
4. எந்த காரியத்தில் பொய் சொன்னால் பாபம் இல்லை?
5. எதனால் ஒருவன் முக்தியை அடைய முடியும்?
6. பகவானான மஹேஸ்வரர் யார்?
7.ஸர்வ வேதாந்த ஸித்தாந்த ஸாரஸங்கிரஹம் என்ற நூலில் எத்தனை ஸ்லோகங்கள்? யாரால் எழுதப்பட்டது? எதை பற்றியது?
8. ராவணனுடைய நான்கு மந்திரிகள் பெயர் என்ன?
9. கும்பகர்ணனுடைய பிள்ளைகள் யார்? அவர்கள் ராம,ராவண யுத்தத்தில் யாரால் கொல்லப்பட்டார்கள்?
10. ராவணன் அழிய வேண்டும் என்று சபித்தவர்கள் யார்?

**சனாதனப் புதிர் : பகுதி – 32** விடைகள் —ஆத்ரேயன்

1. ஸாந்தோக்ய உபநிஷத்தில் சொல்லப்படும் "தத்வமஸி" என்ற மஹாவாக்கியத்திற்கு ஸ்ரீஆதிசங்கரபகவத்பாதாள் செய்த வியாக்கியானம் - இதை வாக்ய விருத்தி என்று அழைக்கிறார்கள்.
2. ஸ்ரீஆதிசங்கரபகவத்பாதர். 6, 12, 17 ஸ்லோகங்கள்.
3. ஸ்வர்ணமாலா ஸ்துதி; ஸ்ரீஆதிசங்கரபகவத்பாதர் - சிவனை குறித்து.
4.சிவானந்த லஹரியில் இருந்து 10ஸ்லோகங்களை எடுத்து ஸங்கிரகம் செய்துள்ளார். ஸ்லோகம் 61, 76, 83, 6, 65, 10, 12, 9, 11, 91.
5. ஸ்ரீசங்கரபகவத்பாதர் அருளிய வேதாந்த ப்ரகரணங்களில் உபதேச ஸாஹஸ்ரீ ஒன்று. இது கத்ய ப்ரபந்தம், பத்ய ப்ரபந்தம் என இரு பாகங்களாக இருக்கின்றன. கத்ய ப்ரபந்தத்தில் 116 வாக்கியங்களும், பத்ய ப்ரபந்தத்தில் 671ஸ்லோகங்களும் உள்ளன. இரண்டிலும் சேர்த்து 787 ஸ்லோகங்கள்.

கண்ணபிரான் துணை





# மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

அவர்களின் அருளாசியுடன்

## சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா

வழங்கும் **5**ஆம் ஆண்டு **தெய்வத் தமிழ் இசை விழா**

**16.12.2011 முதல் 22.12.2011 வரை**

நேரம் : மாலை 7 முதல் 9 வரை
இடம் : மஹோதயா ஹால்
(ஜவஹர் வித்யாலயா பள்ளி)
#38, 4வது அவின்யூ,
அசோக் நகர், சென்னை - 600 083.

துவக்க விழா : 16.12.2011 - வெள்ளி மாலை 7.00 மணி

துவக்க உரை: திரு.R.B.V.S.மணியன் அவர்கள்

சிறப்புரை : செல்வி. N.சாரதா அவர்கள் *விரிவுரையாளர்-தமிழ் இசை கல்லூரி, ராஜா அண்ணாமலை மன்றம், சென்னை*

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 16.12.2011 | தமிழ் கீர்த்தனங்கள் | கடலூர் திரு. பாலசந்தர் & திரு. பாலமுருகன் நாதஸ்வரம் |
| 17.12.2011 | ஸ்ரீ அருணாசல கவிராயர் பாடல்கள் | திரு. ஸ்ரீகாந்த் கௌண்டின்யன் |
| 18.12.2011 | நந்தனார் சரித்திரம் | திருமதி. அனுஷா பாலாஜி |
| 19.12.2011 | தேவார இன்னிசை | திரு. சத்குருநாத ஓதுவார் |
| 20.12.2011 | மகாகவி பாரதியார் பாடல்கள் | செல்வி. ஸ்ரீரஞ்ஜனி சந்தானகோபாலன் |
| 21.12.2011 | வள்ளலார் பாடல்கள் | குன்னக்குடி திரு. M. பாலமுரளிகிருஷ்ணா |
| 22.12.2011 | மஹாரண்யம் ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்கள் | திரு. சட்டநாத பாகவதர் |

# பாலகர்களுக்கு ஒரு கதை



## எது மகிழ்ச்சி?

ஒரு அழகான கிராமம். அந்த கிராமத்தில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு பள்ளிக்கூடம். அந்த பள்ளிக்கூடத்தில்தான், சுற்று வட்டார கிராமத்தில் உள்ள எல்லா குழந்தைகளும் கல்வி கற்கின்றார்கள். இயற்கை சூழ்நிலையில் அமைந்துள்ள ஒரு அழகான பள்ளிக்கூடம். சமயத்தில் வகுப்புகள் மரத்தடிகளில் கூட நடப்பதுண்டு.

எட்டாம் வகுப்பில் படிக்கும் முகுந்தனும், முராரியும் நல்ல நண்பர்கள். முகுந்தன் ஒரு நாள் பள்ளிக்கு வரும்பொழுது, புதிய அழகான SHOES அணிந்து வந்தான். அதை பார்த்த முராரி, இந்த SHOES மிகவும் அழகாக இருக்கின்றது என்றான். ஒரு வாரம் கழித்து முகுந்தன் பள்ளிக்கு வரும்பொழுது, ஒரு அழகான கைகடிகாரம் WRIST WATCH அணிந்து வந்தான். முராரி அந்த கைகடிகாரத்தை ஆசையுடன் பார்த்தான். முராரியிடம் முகுந்தன், இந்த கைகடிகாரத்தையும் தன் அண்ணன் தனக்கு வாங்கி தந்ததாக சொன்னான். அது போல் ஒரு வாரம் கழித்து அழகான தோள்பை ஒன்றை BOOK BAG எடுத்து வந்தான், முகுந்தன். முராரியிடம் அழகான அந்த BOOK BAGஐயும் காண்பித்து சந்தோஷப்பட்டு கொண்டான்.

இப்படியாக அவனுடைய அண்ணன் தன் அன்பு தம்பிக்கு விதம் விதமாக பல பொருள்களை ஒன்று ஒன்றாக வாங்கித்தர, அதை பெருமையுடன் முகுந்தன் முராரியிடம் காண்பிப்பான். ஒரு நாள் முகுந்தன் முராரியிடம், “நான் இவைகளை எல்லாம் அவ்வப்பொழுது காண்பிக்கும்பொழுது, நமக்கு இப்படி ஒரு அண்ணன் இல்லையே என்று ஏக்கமாக உள்ளதா? ஒன்று செய்; நீ கிருஷ்ணனிடம் அடுத்த பிறவியிலாவது, உனக்கு இப்படி ஒரு அண்ணன் அமைய வேண்டும்

என்று பிரார்த்தனை செய்” என்று கூறினான். முராரியும் கண்களை மூடி, ஸ்ரீகிருஷ்ணனை மானஸீகமாக பிரார்த்தனை செய்தான். முகுந்தன், “நான் சொன்ன மாதிரி பிரார்த்தனை செய்தாயா? என்று முராரியிடம் கேட்டான். அதற்கு முராரி, “ஆம்; நான் பிரார்த்தனை செய்தேன்; ஆனால் நீ சொன்னது போல் அல்ல” என்றான். முகுந்தன் ஆவலுடன், “சரி அப்படியானால் நீ என்ன பிரார்த்தனை செய்து கொண்டாய் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?” என்று கேட்டான்.

முராரி சொன்னான், “நான் அடுத்த பிறவியில் அண்ணனாக பிறக்க வேண்டும்; என்னுடைய அன்பு தம்பிக்கு இது போல் வாங்கி கொடுத்து அவன் மகிழ்வதை பார்த்து நான் மகிழ்ச்சி அடைய வேண்டும். இதைத்தான் நான் பிரார்த்தனை செய்தேன்” என்றான். “பெறுவதில் அல்ல மகிழ்ச்சி” “கொடுப்பதில்தான் மகிழ்ச்சி உள்ளது” என்பதை சிறு வயதிலேயே புரிந்து கொண்ட முராரி உண்மையிலேயே பெரியவன்தான்!

Buddies
Infotech Pvt Ltd

OUR SOLUTIONS

- WEB DEVELOPMENT
- SOFTWARE DEVELOPMENT
- WEB MARKETING
- MOBILE SOLUTIONS

Buddies Infotech Pvt Ltd
KG Marina Bay,No.75 & 77, Ground Floor,
Santhome High Road,Santhome,
Chennai 600 004
Phone +91-44-43033313
E-mail: contact@buddiesinfotech.com

## ஸ்ரீஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திர வைபவம்

**அக்டோபர் 27** அன்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திர வைபவத்தை முன்னிட்டு, மதுரபுரி ஆஸ்ரமத்தில் காலை 6மணி முதல் மாலை 6மணி வரை அகண்டமாக நாமகீர்த்தனமும், அஷ்டபதி பஜனையும், மாதுரீஸகீஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு பூஜையும் நடைபெற்றது. வெளிநாடுகளிலிருந்தும் பல ஊர்களிலிருந்தும் ஏராளமான அன்பர்கள் வந்து ஸ்ரீஸ்வாமிஜியின் தரிசனம் பெற்று சென்றனர். அனைவருக்கும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் தமது திருக்கரங்களால் பிரசாதம் வழங்கினார்கள்.

காலையில் சென்னை மேற்கு மாம்பலம் அயோத்யாமண்டபத்தில் கணபதி ஹோமம், சுதர்ஸன ஹோமம், ஸ்ரீஸூக்த மஹாலக்ஷ்மி மஹாயக்ஞ ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், ஆகிய ஹோமங்கள் மிக விமரிசையாக சேங்காலிபுரம் ப்ரும்மஸ்ரீ கண்ணன் தீக்ஷிதர் அத்யக்ஷத்தில் நடைபெற்றது. ப்ரும்மஸ்ரீ கிருஷ்ணச்ரௌதிகள் அத்யக்ஷத்தில் எழுபது சாமவேத வித்வான்கள் பங்கேற்க சாமவேத சம்பூர்ண வேதபாராயணம் நடைபெற்றது. மாலையில் மிக அழகாக குமாரி சுபத்ராவின் நடனமும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனமும், ஐம்பது கோபகுடீர குழந்தைகள் பங்கேற்ற "பக்த மீரா" நாடகமும் நடைபெற்றது. பங்கேற்ற குழந்தைகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களே பரிசுகள் வழங்கினார்கள்.

பல நாடுகளிலும், அனைத்து நாமத்வார் மையங்களிலும், பல ஊர்களிலும், பல அன்பர்கள் இல்லங்களிலும் அன்னதானமும், ஸ்ரீஸ்வாமிஜிக்கு மிகவும் பிடித்தமான மஹாமந்திர கீர்த்தனமும், நகரசங்கீர்த்தனமும், கிருஷ்ணருக்கு பூஜையும், பக்தவிஜய உபன்யாசங்களும் நடைபெற்றது பற்றிய விவரங்கள் வந்தவண்ணம் உள்ளன. இதை கேட்டறிந்த ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் மிகவும் சந்தோஷித்தார்கள். வைபவத்தில் பங்கேற்ற அன்பர்கள் அனைவருக்கும், மதுரபுரி ஆஸ்ரமத்தின் சார்பாக மதுரமுரளி தனது வந்தனங்களை தெரிவித்து கொள்கிறது.

**ராதே ராதே**

# SOUVENIR

GOD India Trust Proposes to bring out a souvenir coinciding with the annual lecture series to be held at Narada GanaSabha / Proposed Service Fair 'Samudhaya Aravanaippu" to be held at Chennai in January/February 2012. The Souvenir will have interesting articles, activities of GOD India Trust and the activities of various institutions functioning with blessings of Sri Sri Swamiji. The Souvenir will have a wide reach and will be widely circulated among the general public and corporates.




GOD India Trust நாரதகானசபாவில் நடக்க உள்ள "பாரம்பரிய பொக்கிஷங்கள்" மற்றும் அதன் பின் நடக்க உள்ள "சமுதாய அரவணைப்பு" நிகழ்ச்சியை ஒட்டி ஒரு நினைவு புத்தக மலரை வெளியிட உள்ளது. இதில் பல சுவையான கட்டுரைகளும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன் செயல்படும் பல ஸ்தாபனங்களை பற்றிய தகவல்களும் இடம்பெறும். இது பெருமளவான பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களை சென்றடைய உள்ளது. இதில் விளம்பரங்கள் கொடுக்க கீழ்கண்ட கட்டண விகிதத்தை கவனிக்கவும்.

| | Rs / ரூ |
|---|---|
| அட்டை உள்பக்கங்கள் /Inner Covers | –25000 |
| பின் அட்டை / Back Page | – 40000 |
| முழு கலர் பக்கம் / Full Page Color | –15000 |
| அரை பக்க கலர் / Half Page Color | – 8000 |
| முழு கருப்பு / வெள்ளை / B/W Full | – 6000 |
| அரைபக்க கருப்பு வெள்ளை / B/W Half | –4000 |
| தாளின் கீழ்பகுதி 2 இன்ச் / Bottom strip 2" | – 2000 |

மேலும் விவரங்களுக்கு ஸ்ரீ பாலாஜி ராமச்சந்திரன் - 044-23718351 / contact@godindia.org அணுகவும்.

## Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



## Gururam Consulting Private Limited

# 'MADHURAM' - STALL

Prop: CHAITANYA MAHAPRABHU NAMABHIKSHA KENDRA
38/22, Thambaiya road Extn, West Mambalam, Chennai - 600 033

**New Stall inaugurated by Sri Sri Muralidhara Swamiji on the occassion of Pillayar Chathurthi**

**Available in "MADHURAM" Bookstall**



- All Books of Sri Sri Swamiji
- All CDs and DVDs of Sri Sri Swamiji
- Pooja Items
- Homa Articles
- Other Divine Books / CD's
- Krishna T-Shirts
- Beautiful Divine Dolls

**NO HOLIDAYS**
**9AM to 1.30PM**
**3PM to 9PM**

CONTACT:
+91 44 2372 7400

*சென்ற மாத நிகழ்ச்சிகள்*

**செப்டம்பர் 28 முதல் அக்டோபர் 5ஆம் தேதி** வரை மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் மிக சிறப்பாக நவராத்திரி கொண்டாடப்பட்டது. தினமும் பலவிதமான அலங்காரங்கள் பிரேமிகவரதனுக்கும் மாதுரீஸகீக்கும் செய்யப்பட்டன. ராமாயண பாராயணமும் உபன்யாசமும் நடைபெற்றது.

**அக்டோபர் 6 விஜயதசமி** அன்று சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் **ஸ்ரீனிவாசபெருமாளின் அவதார உத்ஸவம்** மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**அக்டோபர் 14 முதல் 16 வரை மருதாநல்லூர் சத்குரு ஸ்வாமிகள் மடத்தில்** ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உபன்யாசம் நடைபெற்றது. இதே சமயங்களில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் திருநாங்கூரில் உள்ள ஜெயந்திஜானகிராமன் நினைவு வைணவ வேத, ஆகம பாடசாலைக்கும் அருகில் உள்ள திவ்யதேசங்களுக்கும், செந்தாங்குடி பசு மடத்திற்கும் சென்றிருந்தார். 17ஆம் தேதியன்று பாலக்கோடு நாமத்வாருக்கு விஜயம் செய்தார்கள்.

**அக்டோபர் 23 மேற்கு மாம்பலம் அயோத்யா மண்டபத்தில்** நன்னிலம் ப்ரும்மஸ்ரீ ராஜகோபால் கனபாடிகள் நடத்தி வரும் “**வைதிகஸ்ரீ**” பத்திரிக்கையின் ஆண்டு விழாவில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்துகொண்டு நூறாவது இதழை வெளியிட்டு அருளுரை வழங்கினார்கள்.

**அக்டோபர் 15** அன்று மஹாரண்யம் கல்யாணஸ்ரீனிவாசபெருமாள் கோவிலுக்கு கடைசி புரட்டாசி சனிக்கிழமை அன்று கன்யாமாத விரத பூர்த்தியை முன்னிட்டு, தென்மேல்பாக்கத்தில் இருந்து அன்பர்கள் பாதயாத்திரையாகவும், மேலும் குடியாத்தம், கேவலசை, கள்ளப்பாடி, தூத்துக்குடி, சிவகாசி, விருதுநகர் உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்தும் அன்பர்கள் சுமார் 1500க்கும் மேலாக வந்திருந்தனர். மஹாமந்திர நாமகோஷத்துடன் அன்னகூடோத்ஸவமும் அகண்ட தீப வழிபாடும் கூட்டு பிரார்த்தனையும் நடைபெற்றது. அன்பர்கள் அனைவருக்கும் பிரசாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி

## ஸ்ரீகிஷோரி ஸரண்பாபா – 1

"வைஷ்ணவ ஜனதோ தேன கஹியே ஜே பீட் பராயீ ஜானே ரே" என்கிறார் நரஸிம்ம மேத்தா. மற்றவர்களின் துன்பத்தை தன் துன்பமாகவே நினைப்பானாம், ஒரு உண்மையான விஷ்ணு பக்தன். ப்ருந்தாவனத்தை சேர்ந்த ஸ்ரீகிஷோரி ஸரண்பாபா அப்படிப்பட்ட ஒரு உண்மையான வைஷ்ணவராக திகழ்ந்தார். தனது பக்தர்களிடம் அவர் அடிக்கடி , என் விருப்பம் என்னவென்றால் இந்த உலகத்தின் அனைத்து துன்பத்தையும் எனது மார்பிலேயே தாங்க வேண்டும். ஒரு நாய் கூட வேதனையடைய கூடாது என்பதே என் ஆசை என்பார்.

பார்வையில்லாத இவரை ஸூர்தாஸ் பாபா என்றும் அழைப்பார்கள். ப்ருந்தாவனத்தில் ஸ்யாமகுஞ்சம் என்ற இடத்தில் வசித்து வந்தார் பாபா. ஸம்ஸாரத்தில் துன்பப்படும் மக்களுக்கு கல்பதரு போன்றும், கலிகாலத்தில், மோஹமடைந்து இருளில் மூழ்கும் ஜீவன்களுக்கு ஞான விளக்காகவும் திகழ்ந்தார் பாபா. சிறுவர் முதல் பெரியவர் வரை, ஆண்கள், பெண்கள், பணக்காரன், ஏழை, ஸாது, ஸன்யாஸி, என்ற எந்த வித பேதமும் பாராமல் அவரது இல்லத்து வாயில் எப்பொழுதும் திறந்தே இருக்கும். எல்லோரும் பாபாவிடம், தங்களது துக்கங்களையும் குறைபாடுகளையும் கூறுவர். பாபா அவர்களின் குறைபாடுகளை போக்கி, அவர்களுக்கு தனது அமுதம் போன்ற உபதேசத்தை அளித்து அமைதி அளிப்பார்.

ஒருமுறை குளிர் காலத்தில் பாபா, தனது பக்தர்களுடன் ஸ்யாமகுஞ்சத்தின் வராண்டாவில் அமர்ந்திருந்தார். எல்லோரும் குளிர் காய்ந்து கொண்டிருந்தனர். அப்பொழுது அங்கு வந்த பக்தர் ஒருவர், கம்பளி வஸ்திரம் ஒன்றை பாபாவிற்கு அன்பளிப்பாக அளித்தார். பாபா அதை ப்ரேமையுடன் அணிந்து கொண்டார். "மிகவும் அழகாக உள்ளது. இதை போட்டுக்கொண்டால் குளிர் தெரியவே இல்லை" என்றார் பாபா.

அப்பொழுது ஏழை வ்ரஜவாஸி ஒருவன் அங்கு வந்து பாபா!

மிகவும் குளிராக உள்ளது. என்னிடம் உடுத்தி கொள்ள சரியான வஸ்திரம் கூட இல்லை என்றான். பாபா உடனே, தான் அணிந்திருந்த கம்பளி வஸ்திரத்தை எடுத்து, அவனிடம் கொடுத்து, "இதை எடுத்து கொள்ளுங்கள் அய்யா! இது இன்று தங்களுக்காகவே வந்துள்ளது" என்றார்.

மாடு மேய்ப்பவன் ஒருவனின் மூன்று எருமைகள் தொலைந்து விட்டன. எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை. அவன் பாபாவிடம் ஓடோடி வந்தான். அவரது சரணங்களில் ஏதோ காணிக்கை சமர்ப்பித்து விட்டு நமஸ்கரித்தான். அவன் ஏதும் கூறுவதற்கு முன்பே, பாபா அவன் அளித்த அன்பளிப்பை அவனிடமே கொடுத்து "உன்னிடமே வைத்து கொள். எருமைகள் கிடைத்து விட்டால் அகண்ட கீர்த்தனம் ஏற்பாடு செய்து விடு" என்றார். எதுவுமே கூறாமால், பாபா எப்படி இந்த விஷயத்தை அறிந்தார் என்று ஆச்சர்யத்தில் மூழ்கினான் அந்த மாடு மேய்ப்பவன். பாபாவின் சரணங்களை பற்றி கண்ணீர் சொரிந்தவாறே அவன் "பாபா! தாங்கள் கிருபை செய்தால்தானே எருமைகள் கிடைக்கும். அவைகள்தான் எனது மொத்த சொத்தும். அவைகள் கிடைக்காவிட்டால் எனது குழந்தைகள் பசியில் மடிந்து விடுவார்கள்"என்று புலம்பினான்.

பாபாவின் மனது உருகி விட்டது. "கவலைப்படாதே. உன் எருமைகள் கிழக்கு திசையில் யமுனை நதியின் அக்கரையில் இறங்கியுள்ளன. ஒரு மரத்தின் அடியில் அவைகள் அமர்ந்திருக்கின்றன. மதியம் சென்று அவற்றை நீ ஓட்டி வா" என்று பாபா அவனிடம் கூறினார். பாபா கூறியபடியே அப்படியே இருந்தது. அவர் கூறிய அதே இடத்தில் எருமைகள் இருந்தன. அவன் பாபா கூறியபடியே கீர்த்தனம் ஏற்பாடு செய்தான். மேலும் அவனது குடும்பம் முழுவதுமே பாபாவிடம் தீக்ஷை பெற்று பாபாவின் சிஷ்யர்களாகி விட்டார்கள்.

(தொடரும்)

# மாலே மணிவண்ணா – 101

## –மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

விஷ்ணு சஹஸ்ர நாமத்தில் "விஸ்வாத்மா" என்று ஒரு திருநாமம் வரும். இயங்கியற்பொருள், நிலையியற்பொருள், சரம், அசரம் எனப்படும் எல்லா உயிரினத்திற்கும் ஆத்மாவாக, உலகம் எனப் பலவாறாக தோன்றுவதனைத்திற்கும் நிலைக்களனாக உள்ளவர் என்பது, இத்திருநாமத்தின் பொருள். இதனையே இதுவரை அறிந்தோம்.

தானே தன்னிடமிருந்து தன்னையே தன்னிடம் பலவாக ஆக்கியும் பிரித்தும் ஒவ்வொன்றினுள்ளும் நுழைந்து, பரவி, அவை அவற்றை அவையாக காட்சி தரும்படி செய்து, ஆட்டுவித்து விளையாட செய்து, அந்த விளையாட்டை சாட்சியாக நின்று கவனித்து பற்றற்று நிற்கிறார் என்ற இறை நிலை இங்கு அறியத்தக்கது.

இந்நிலையை கம்பநாட்டாழ்வார் தமது இராமாயணத்தே

*உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்*
*நிலை பெறுத்தலும் நீங்கலும் நீங்கலா*
*அலகிலா விளையாட்டு உடையார் அவர்*
*தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே*

என்று கடவுள் வாழ்த்திலே குறிப்பிடுகிறார். இதனுள் கணக்கற்ற விளையாட்டை உடையவர் என்ற பொருள் கொள்வதோடு கணக்கற்ற உயிர்களை பக்குவப்படுத்துகின்ற ஆட்டத்தை உடையவர் என்ற பொருளில் "அலகு இல் ஆ விளை ஆட்டு உடையார்" என்று பிரித்தும்

*பகவான் ஆறு சிறப்புகளை உடையவன். ஞானம், ஐஸ்வரியம், சக்தி, பலம், வீர்யம், தேஜஸ்(ஒளி) என்ற ஆறு சிறப்புகள் உடையவன் ஆதலில் பகவான் என பெற்றான்.*

உரை செய்யுமாறு கூறிய நுட்பம் அறிந்து மகிழதக்கது.

ஸ்ரீமந்நாராயணன் என்பது நார-அயணன் என்று பிரிந்து அன்பினில் தோன்றுபவன் என்று பொருள்படும். பகவான் என்ற சொல் ஆறு குணங்களுக்கும் நிலையமாக விளங்குகின்றவன் என பொருள் படும். பகம் என்றால் ஆறு. பகவான் ஆறு சிறப்புகளை உடையவன். ஞானம், ஐஸ்வரியம், சக்தி, பலம், வீர்யம், தேஜஸ்(ஒளி) என்ற ஆறு சிறப்புகள் உடையவன் ஆதலில் பகவான் என பெற்றான். பகவான் நாராயணனை பரிபாடல் இம்முதற்பகுதியில் காட்டுகிறது.

*தன்னுரு உறழும் பாற்கடல் நாப்பண்*
*மின்னஞ்சுடர்மணி ஆயிரம் விரித்த*
*கவை நா அருந்தலைக் காண்பு இன் சேக்கைத்*
*துளபம் சூடிய அறிதுயிலோனும்*

இது பகவான் உலகிற்கு காரியம் கொள்ளும் மூல நிலை ஆகும்.தன் நீல நிறத்தோடு மாறுபடுகின்ற வெண்மை நிறத்தோடு கூடிய திருப்பாற்கடலின் நடுவில் மின்னலை போல விட்டு விட்டு விளங்கும் ஒளி படைத்த மாணிக்க மணியுடன் விரிந்த ஆயிரம் தலைகளை உடைய ஆதிசேடனாகிய பாம்பு படுக்கையின்கண் உள்ள துளவமாலையை சூடிய யோக நித்திரையில் உள்ளவனாகிய ஸ்ரீமந்நாராயணனும் - என்று வியூகத்தில் அறிதுயில் அமர்ந்த பெருமானை காட்டினார். பெருமான் தூங்குவது தூக்கம் அன்று அது அறிதுயில் எனப்படும் யோக நித்திரை.

ஸஹஸ்ர நாமத்தில் 18வது மந்திரம் யோக என்பதாகும். துன்பத்தை நீக்கி இன்பத்தை ஆக்குவதே யோகம் ஆகும் -'யுக்' என்ற அடிச்சொல்லுக்கு சேர்தல் என்று பொருள். தியானிக்கப்படும் பொருளோடு சேர்தல் - இடையறாது நினைத்தலால் ஆகும்.

(தொடரும்)

**செப்டம்பர் 30 – அக்டோபர் 1 – நாகப்பட்டினம் ஸ்ரீசௌந்தரராஜ பெருமாள் கோவிலில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை** நடைபெற்றது. ராமானுஜம்ஜி கலந்து கொண்டு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் “கலியையும் பலி கொள்ளும்” – “ஹரே ராம” மஹாமந்திர கீர்த்தனை குறித்து பேசினார். புரட்டாசி சனிக்கிழமைக்காக வந்திருந்த ஏராளமான அன்பர்களும் மஹாமந்திர கீர்த்தனையில் பங்குபெற்றது குறிப்பிடத்தக்கது. புலியூர் பஜனை ஹாலிலும் ராமானுஜம்ஜி ஒரு சத்சங்கம் ந்கழ்த்தினார். **அக்டோபர்** 14 அன்று **உடுமலைப்பேட்டையில் பள்ளி மாணவமாணவிகளுக்கான கூட்டு பிரார்த்தனை** குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி டிரஸ்ட் சார்பாக இரு இடங்களில் நடைபெற்றது. சுமார் 5பள்ளிகளை சேர்ந்த 1500 மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இதில் ராமானுஜம்ஜியும் மற்றும் ஆஸ்திரேலியா ஸ்ரீகாந்தன்ஜியும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

rb rajmani builders

launches its new project

"rajmani's mathura"

at kolapakkam (near Porur)

well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices

ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com

website: www.rajmanibuilders.com

## அப்பாலுக்கு அப்பால் சித்தாராமர் -2

ஷோலாப்பூரில் தற்போதைய கலெக்டர் பங்களாவிற்கு முன்னிருக்கும் இடத்தில்தான், சித்தாராமனுக்கு சிவன் குருவாக வந்து காட்சி அளித்தார் எனப்படுகிறது. ஸ்ரீசைலம் வந்த சித்தாராமன் சிவலிங்கத்தை பார்த்து, இவர், தான் ஷோலாப்பூரில் பார்த்த குரு இல்லை என்று கூறி, அழுது அழுது வந்த கண்ணீரால் “நயனகுண்டம்” என்ற ஒரு குளமே வந்தது என்பர்.

ஸ்ரீஸைலத்தில் அங்குமிங்கும் ஓடினான் சிறுவன். விளையாட மனம் கொண்ட பரமனோ சிறுவன் முன் தோன்றவே இல்லை. பரமன் வராததால், களைத்து மனம் வாடிப்போன சிறுவன், ஒரு மலை உச்சியிலிருந்து, கீழே விழுந்து தன்னை மாய்த்து கொள்ள சென்றான். அவன் விழ இருக்கையில் மறுபடி அந்த சிவகுரு தோன்றினார். இப்பொழுது அவர் தனது சுயரூபமான ரிஷபாரூடராகவே காட்சி அளித்தார். சிறுவனை தடுத்தாட்கொண்டு, அவனை மறுபடி ஷோலாப்பூருக்கு சென்று அங்கு சிவலிங்கங்களை ஸ்தாபிக்க சொன்னார். மக்களுக்கு பல விதமான நன்மைகளையும் செய்து வர சொன்னார். சிறுவன் கையில் ஒரு யோகதண்டமும் ஒரு வஜ்ர குண்டலமும் கொடுத்து அனுப்பினார்.

சிவனாரின் உத்திரவுப்படி, சித்தாராமரும் ஷோலாப்பூருக்கு வந்து அங்கு பல கோவில்களையும், 68லிங்கங்களையும் ஸ்தாபித்தார். இவை ஷோலாப்பூரை சுற்றி, பல இடங்களில் இருக்கின்றன. அங்கு நீர் பஞ்சம் இருந்ததால், பல ஏரிகளையும் குளங்களையும் கட்டுவித்தார். இவர் ஏரியை வெட்டினார் என்றால், அனைத்து புண்ய நதிகளும் அங்கு வந்து வாஸம் செய்ய அவரிடம் அனுமதி கேட்குமாம். இவர் அநேக பைசாச ஜீவன்களை, அவற்றின் துன்பத்திலிருந்து விடுவித்தார். சிவலோகத்தில் இருந்து ஒரு சாபத்தின் காரணமாய் பிறந்திருந்த இவரது பெற்றோர்களும் சாபம் நீங்கி, மறுபடி சிவலோகமே சென்றனர். சித்தாராமர் திருமணம் உட்பட பலவற்றில், பல சமுதாய சீர்திருத்தங்களை செய்தார். மக்கள் சித்தாராமர் சொற்படி கேட்டு இன்முகமாக வாழ்ந்து வந்தனர்.

ஏராளமான யோக சித்திகள் இவருக்கு இருந்தது.

அல்லமபிரபு இவரை பார்ப்பதற்குத்தான் வந்து கொண்டிருந்தார். வழி நெடுக, சித்தாராமர் செய்திருந்த சமுதாய பணிகளை பார்க்கையில், மிக்க மகிழ்ச்சி உற்றார் அல்லமர். ஆனால் அதை வெளிக்காட்டி கொள்ளவே இல்லை. தமது வழக்கமான பாணியில் சித்தாரமரை பற்றி ஏளனமாக, அவரது பக்தர்களிடம் பேச ஆரம்பித்தார். சித்தாராமரின் பக்தர்கள் நீர்நிலைகள் மற்றும் கோவில்கள் பல கட்டுவதை பார்த்து "நீர்வாழினங்கள் பூமியிலிருக்கா; ஆனால் (பூமி எங்கும் கோவிலாகி விட்டால்) மனிதன் வேறு எங்குதான் இருப்பான்? மூவுலகிலுமுள்ள குஹேஸ்வரா! உன் லீலை நகைப்பாய் இருக்கிறது" என்பார். மேலும் அவர்களை பார்த்து, " கல் கொண்டு வீடு கட்டும் நீர் இறைவனை கல்லாக்குகிறீர்; இறைவனை கல்லாக்கும் நீர் நரகம் புகுவீர்; உடம்பே கோவில்; மூச்சே லிங்கம்; மற்றொரு கோவிலெதற்கு? என்ன சொல்வது? நீங்களே கல் அல்லவா? உண்மையை சொல்லுங்கள்; வீடும், நீர்நிலைகள் கட்டுவதும் பொன்னுலகம் தரும்; ஆனால் அங்கு இறைவன் தெரியான்; குஹேஸ்வரனை தெரியாதெனில் வாழ்க்கை குறை; வீண்" என்பார். சமயத்தில், "உடம்பே கரை; மனமே வழி; நற்குணமே படிகள்; அவை மூலம் ஆனந்த நீரை நிரப்பியவரை காணேன்; ஆனால் நான் அப்படி ஒன்று கட்டி உள்ளேன்; அன்பரே அது என்றும் இருக்கும்; கல் மேல் கல் கட்டுவது புண்ணியமாம்; இந்த மடமையை என்னவென்பது? பாத்திரத்தை உள்ளே துலக்காமல் நீரை நிரப்பலாகாது என தெரியாத உங்கள் அரைகுறை தலைவன் எங்கே? தன் மூலம் அறியாத அவன் எப்படி பூமியின் மூலத்தை தோண்டலாம்? குஹேஸ்வரனை அறியாத உங்கள் சித்தாராமன் எங்கே" என எகத்தாளமாக பேசி சிரிப்பார். சித்தாராமரின் பக்தர்களுக்கு அடங்கா கோபம் வந்தது. அல்லமரை நோக்கி கற்களை வீசி தாக்கினர். அல்லமர் சிரித்தபடி நிற்க, கற்கள் எறிந்தவரையே மறுபடி தாக்கின.

(தொடரும்)

மதுரமுரளி சந்தாதாரர் ஆக விரும்புகிறவர்கள் Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/-ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை / டி.டி. / மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டு கொள்கிறோம். ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் விவரங்களுக்கு அணுகவும்:

PH: +91-44-24895875


- Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83


- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.


## ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| நவம்பர் 3 | கோபாஷ்டமி |
| நவம்பர் 7 | வள்ளிபுரம்-செங்கல்பட்டு சமீபம்- ஆஞ்சநேயர் கோவில் கும்பாபிஷேகம் |
| நவம்பர் 18-20 | பெங்களூர் சுந்தர ஆஞ்சநேயர் கோவில் |
| நவம்பர் 23 | மதுரை ஜெய்ஹிந்த்புரம் - யோகிராம்சுரத்குமார் கோவில் பூமி பூஜை |
| டிசம்பர் 8 | அனுமத் ஜெயந்தி - பெங்களூர் சுந்தர ஆஞ்சநேயர் கோவில் |
| ஏகாதசி | நவம்பர் 6(விட்டலாபுரம்), நவம்பர் 21, டிசம்பர் 6, 21 |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை


Dr.A.BHAGYANATHAN, Personal Secretary

to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.

Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.